මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: BD/GPS/13/01/12/2023
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2023.06.16

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபம் : 03/2023**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்/ மாவட்டச் செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும்
அரசுடமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் முறையான மதிப்பீட்டிற்கான தேசிய அபிவிருத்திக் குழுவிற்கான வழிகாட்டுதல்**

2023 வரவுசெலவுத்திட்ட உரையில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் அறிவிக்கப்பட்டவாறு புதிய கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதை உறுதி செய்யும் நோக்குடன் புதிய கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் முறையான மதிப்பீட்டிற்கான தேசிய அபிவிருத்திக் குழுவினை (இதனகத்துப் பின்னர் "குழு" என அழைக்கப்படும்) தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டது. இதன்படி குழுவின் அமைப்பு மற்றும் பொறுப்புகளுக்கான அமைச்சரவை அங்கீகாரம் 2023.05.23 பெறப்பட்டதுடன், இக்குழுவானது 2023.05.26 அன்று தாபிக்கப்பட்டது.

2048 ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்த நாடு என்ற நிலையை அடைவதற்கு ஒத்துழைக்கும் வகையில் அரச செலவினங்களை விவேகமாகவும் உற்பத்தித்திறன் மிக்கதாகவும் ஒழுங்குபடுத்துவதன் மூலம் கருத்திட்டங்களின் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் / முடிவுகளை அடைவதை உறுதி செய்வதற்கு கருத்திட்ட முன்மொழிவுகளின் முழுமையான மதிப்பீட்டை குழு நடத்த வேண்டும். இந்தக் குழு இறுதி பரிந்துரைகளை அமைச்சரவைக்கு வழங்குவதுடன் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**1. குழுவின் நோக்கெல்லை**

அ) கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்கியனவா என்பதனை உறுதி செய்தல்.

ஆ) கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் நம்பகத்தன்மையினை உறுதி செய்தல்.

இ) கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்தல்.

ஈ) கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் துறைகளுக்கு இடையேயான சீரமைப்புகளை உறுதி செய்தல்.

உ) அரசாங்க அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு எதிராக கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னுரிமையை பரிசீலித்தல்.

ஊ) தேசிய நலன் மற்றும் கருத்திட்ட நலன்களை உறுதி செய்தல்.

எ) தேசிய பொருளாதாரம் மற்றும் மக்கள் நலனில் கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டங்களின் தாக்கத்தை பரிசீலித்தல்.

ஏ) முதலீட்டிற்கான வருமானத்தை உறுதி செய்தல்.

ஒ) சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.

ஓ) கடன் அடிப்படையில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களின்/ நிகழ்ச்சித்திட்டங்களின் கடன் மீள்செலுத்தல் ஆற்றலினை பரிசீலித்தல்.

ஐ) ஒவ்வொரு கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான குழு பரிந்துரைகளை பரிசீலனைக்கு சமர்ப்பித்த அமைச்சின் மூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல்.

**2. குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டிய கருத்திட்ட முன்மொழிவுகள்**

தேசிய திட்டமிடல் திணைக்களம் பரிந்துரைத்துள்ள மொத்த மதிப்பிடப்பட்ட செலவில், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகை குழுவிற்கு தற்போது பொருந்தக்கூடிய அதிகார வரையறைகளுக்குச் சமமான அல்லது அதற்கு மேலுள்ள கருத்திட்டங்கள் மற்றும் பின்வரும் வகையைச் சேர்ந்த ஏதேனும் ஒன்று குழுவிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

i. புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் அனைத்தும்.
ii. நடந்து கொண்டிருக்கும் கருத்திட்டங்களுக்கான நோக்கத்தினை மாற்றுதல்.
iii. மேற்கூறிய செலவு வரையறைக்குள் எந்தவொரு வடிவத்திலும் அரசாங்க அர்ப்பணிப்புடன் கூடிய புதிய பொது தனியார் கூட்டாண்மை (PPP) கருத்திட்டங்களும்.
iv. 2018.06.01 இற்குப் பிறகு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டு, இதுவரை செயற்படுத்தப்படாத முன்மொழிவுகள்.
v. 2018.06.01 இற்குப் பிறகு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவு இதுவரை செயற்படுத்தப்படாதிருப்பின், தேவையேற்படும் போது, தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு புதிய முன்மொழிவொன்றாக மீண்டும் சமர்ப்பிக்க முடியும்.

**3. பின்பற்றப்பட வேண்டிய நடபடிமுறை**

1. 2019.01.10 ஆந் திகதிய MNPEA 02/2019 ஆம் இலக்க தேசிய திட்டமிடல் திணைக்கள சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின்படி அனைத்து கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் தயாரிக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. தேசிய திட்டமிடல் திணைக்களம் மேலே உள்ள பந்தி 2 இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களை மட்டுமே குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

3. குழு அழைப்பு விடுத்தால், சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சு அல்லது முகவர்கள், அது தொடர்பான தகவல்களுடன் குழுவின் முன் ஆஜராகுதல் வேண்டும்.

4. குழுவானது சனாதிபதியின் செயலாளர், கணக்காய்வாளர் நாயகம், அமைச்சரவை செயலாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் பிற தொடர்புடைய திறைசேரி திணைக்களங்களுக்கு அது பொருந்தும் வகையில் ஒரு பிரதியுடன் தொடர்புடைய அமைச்சுக்கு பரிந்துரைகளை வழங்கும்.

5. தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு மதிப்பீட்டிற்கும் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கும் தேவைப்படும் கால அவகாசம் தொடர்பில் போதிய கவனம் செலுத்தி நிரல் அமைச்சின் மூலம் தேசிய திட்டமிடல் திணைக்கள சுற்றுநிருபத்திற்கேற்ப, கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

6. கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக திட்ட முன்மொழிவை சமர்ப்பிக்கும் போது குழுவின் பரிந்துரையும் அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

தேசிய வரவு செலவுத் திணைக்களம் குழுவின் செயற்பாடுகளுக்கான வசதி ஏற்பாட்டுச் செயலகமாகச் செயற்படுவதுடன் இந்த சுற்றறிக்கையின் மேலதிக தெளிவுபடுத்தலுக்கு தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ரசிக விஜேசேகரவினை, 0112484690 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்புகொள்ளலாம்.

**ஒப்பம்/ ஏ.கே. செனவிதர்ன**
**திறைசேரியின் செயலாளர் (பதில்)**

**பிரதிகள் :**

1. சனாபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், நிதி ஆணைக்குழு